உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி

F.No.25-74/AE- I/JE(L)/O.M./2025-26 நாள்: 06-02-2026

உழவர்கரை நகராட்சியில் உள்ள சாரம் வருவாய் கிராமத்தில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள புதிய சாலை பகுதிகளின் விவரங்கள் அடங்கிய பட்டியல் அடியிற்கண்ட அட்டவணையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதிகள் அனைத்தும் பொது மக்கள் பயன்படுத்துவதற்கு தேவைப்படுவதால் 1973-ம் ஆண்டு புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், பிரிவு 256 அதிகாரத்தின்படி நகராட்சி பொது வீதிகளாக அறிவிக்க உத்தேசித்துள்ளது. மேற்படி வீதிகளின் உரிமையாளர் அல்லது வாரிசுதாரர்கள் அல்லது தொடர்புடையவர்களுக்கு (அல்லது) நகர் பிரிவை சேர்ந்தவர்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் இவ்வறிக்கை வெளியிடப்பட்ட முப்பது நாட்களுக்குள் எழுத்துப் பூர்வமாக நகராட்சிக்கு தெரிவிக்கும்படி கோரப்படுகிறது. அவ்வாறு முப்பது நாட்களுக்குள் ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லை என்றால் இவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளை பொது மக்களின் உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ளப்படும் என்பதனை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. மேலும் கீழ்கண்ட அட்டவணையில் உள்ள சாலைகள் அனைத்தும் நில அளவீட்டு புத்தகம் (FMB) உள்ள அளவீடுகளின்படி ஒப்பிட்டு கொடுக்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் சாலை மற்றும் மனைகளின் அளவுகளில் ஏதேனும் ஆட்சேபனை பெறப்பட்டால் அதற்கு நகராட்சி பொறுப்பேற்காது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கீழ்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதிகளின் வரைபடங்களை அலுவலக நேரங்களில் பொறியியல் பிரிவில் அணுகி பார்வையிடலாம்.

| வரிசை. எண். | வருவாய் கிராமம்/ உட் கிராமம் | சாலை பெயர் | உரிமையாளர் பெயர் (ஆவணப்படி) | மறு அளவை எண். | பட்டா எண். | அளவு | | | குறிப்பு (திசைகள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நீளம் (மீட்டர்) | அகலம் (மீட்டர்) | பரப்பளவு (சதுர மீட்டர்) | |
| 1. | 38, சாரம் வருவாய் கிராமம் | சாலை | 1. திரு. சித்தானந்த நாயக்கர் த/பெ. திரு. சரவண நாயக்கர்<br><br>2. திருமதி. லாவண்யா க/பெ. திரு. V. கண்ணன் | 218/5/B | 520 | மேற்கு பக்கம் 30.50 மீ<br><br>கிழக்கு பக்கம் 36.50 மீ | 6.10 மீ | 204.35 சதுர மீட்டர் | தெற்கு வடக்கு |

ஆணையர்
உழவர்கரை நகராட்சி